# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 23, திருவள்ளுவர் ஆண்டு—2053

## 2022 ஏப்ரல் 6, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு."*

*உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**54—**

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***2497—திரு. ஆ.மு. முனிரத்தினம்:**

*மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோளிங்கர் தொகுதி, கொடைக்கல் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

ஆம். சோளிங்கர் தொகுதி, கொடைக்கல் கிராமத்தில் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்திட அரசாணை எண் (3D) 125, வேளாண்மை–உழவர் நலத் துறை, நாள் 20–12–2021–ன்படி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 500 மெ. டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குடன்கூடிய துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், அம்மூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அறிவிக்கையிடப்பட்ட பகுதிக்குட்பட்ட, கொடைக்கல் கிராமத்தில் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

**திருமதி S. விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முனிரத்தினம் அவர்கள், உடல்நலக் குறைவால் இன்று வர இயலவில்லை. அவர் கேட்ட இந்தக் கேள்விக்குப் பதிலாக சோளிங்கர் தொகுதி, கொடைக்கல் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க ரூ.94 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணிகள் தொடங்கியுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு இணைத்து உலர் களங்களும் அந்தப் பகுதியில் அமைத்துத் தருமாறும், அதற்கு leading சாலைகளையும் சரி செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடெங்கும், குறிப்பாக வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்கள், சோளிங்கர் போன்ற பல்வேறு பகுதிகளில், B.Sc. (Agriculture) படித்து விட்டு, இந்தத் துறையில், குறிப்பாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் மற்றும் துறை ரீதியாகவும், BTM, ATM–களாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். தற்போது காலிப் பணியிடங்கள் நிறைய

*2022 ஏப்ரல் 6*]

இருக்கின்றன. அவற்றை நிரப்பி, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணிகள் செய்வதற்கு அதிகமான ஆட்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க நிதியொதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறியமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் BTM, ATM ஆகிய பதவிகளில் காலிப் பணியிடங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எந்தெந்தப் பகுதிகளில் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து, அவை பூர்த்தி செய்யப்படும். அதேபோல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தேவையிருக்கின்ற பகுதிகளில் அவை உருவாக்கப்படும். ஏனென்றால், இப்போது இந்த அரசு பொறுப்பேற்ற 10 மாதக் காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால், கிட்டத்தட்ட 90 ஆண்டுக்காலம் இல்லாத ஒரு சாதனையாக, விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்மீது நம்பிக்கை வைத்து, அவர்களுக்கு அதிகமான, சரியான விலை கிடைக்கின்ற காரணத்தினால் அதிகபட்சமாக இந்த ஆண்டு கிட்டத்தட்ட 21 இலட்சம் மெ. டன் வேளாண் விளைபொருட்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாகப் பரிவர்த்தனை செய்யப்பட்டன. இந்த 10 மாத ஆட்சிக் காலத்தில், விவசாயிகள் மத்தியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்மீது இந்த அளவுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தால், அவற்றைப் பயன்படுத்துகின்றார்கள். எனவே, அதனை அறிந்து எந்தெந்தப் பகுதிகளில் விவசாயிகளுக்கு இதுபோன்ற தேவைகள் இருக்கின்றனவோ, அந்தந்தப் பகுதிகளில் விவசாயிகளின் தேவைக்கேற்ப அவை உருவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல் செங்கம் பகுதியில்

*30 ஆண்டுகளுக்கு முன்பு அனைத்து வசதிகளுடன், எப்போதும் வற்றாத ராட்சத கிணறு கொண்ட 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மத்திய–மாநில விதைப் பண்ணை செயல்பட்டுக் கொண்டிருந்தது. இதுகுறித்து கடந்த 5 ஆண்டுக்காலம் நான் கேட்டேன். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே இருக்கிறார்கள். அந்த 12 ஆயிரம் ஏக்கர் நிலம் மீண்டும் பழைய முறைப்படி விதைப் பண்ணையாகச் செயல்படுமா அல்லது வேளாண் பல்கலைக்கழகத்தைப் பிரித்து, தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றி நேரடியாக என்னிடத்தில் கூறியிருக்கலாம் அல்லது எழுத்துப்பூர்வமாகக் கேட்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு அப்பகுதியில் தேவையிருப்பின் அதுகுறித்து பரிசீலிக்கப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையை அறிவித்ததன் அடிப்படையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் இரண்டு நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதுபோன்ற தேவையிருப்பின் பூர்த்தி செய்யப்படும். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கென தனிக் கேள்வி கேட்டால், அதற்குரிய பதில் அளிக்கப்படும். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, அவர்களிடமிருந்து நேரடியாகக் கேட்டறிந்து, மிக விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

**திரு. ஆ. கோவிந்தசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில், தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும்*

*2022 ஏப்ரல் 6]*

*வேளாண்மை பட்டயக் கல்லூரிக்காக ஏறக்குறைய 98 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு, மாணவர்கள் படிப்பதற்காக, அங்கே கட்டட வசதியில்லை என்றாலும்கூட, அரசுக் கட்டடத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாணவர்கள் தங்குவதற்கு விடுதிக்கும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆட்சிக் காலத்தில் அது **. எங்கள் மாவட்டத்தில் அனைத்துக் கல்லூரிகளும் இருக்கின்றன. வேளாண்மைக் கல்வி படிப்பதற்கு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *** என்று சொல்லக் கூடாது. வினாக்கள்–விடைகள் நேரத்தில் 'எனக்கு வேண்டும்' என்றுதான் நீங்கள் கேள்வி கேட்கவேண்டும்.*

**திரு. ஆ. கோவிந்தசாமி:** *நான் அதைத்தான் கேட்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) புரிந்துகொள்ளுங்கள். மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, அவர்கள் இடம் தேர்வு செய்தார்கள். ஆனால், விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கத் தகுதியில்லாத நிலங்களில், கரடு முரடான, மலைப் பாங்கான இடங்களில் சுமார் 120 ஏக்கர் இடம் இருக்கிறது. எல்லா பயிர்களும் விளைகின்ற நிலமாக அது இருக்க வேண்டும். ஆனால், தேர்வு செய்யப்பட்ட இடம் சரியானதாக இல்லை. அது விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க உகந்த இடமாக இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, பிற்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, விதிமுறைகளுக்குட்பட்டு, அப்பகுதியில் தேவையான நிலங்கள் இருந்தால், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*